
தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253
நமது தினகனி
NAMADHU DHINA KANI www.dhinakani.com
காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 179 | 4 Pages | 26.1.2025 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 179 | 4 பக்கங்கள் | 26.1.2025 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**இன்னா எனத்தா னுணர்ந்தவை துன்னாமை**
**வேண்டும் பிறன்கட் செயல்**

**விளக்கம்:**
**ஒருவன் துன்பமானவை என்று தன் வாழ்க்கையில் கண்டு உணர்ந்தவைகளை மற்றவனிடத்தில் செய்யாமல் தவிர்க்க வேண்டும்.**

# கட்சி தொடங்கியவுடன் ஆட்சிக்கு வரத் துடிக்கிறார் விஜய் மீது முதல்வர் தாக்கு

சென்னை, ஜன.26

நாம் தமிழர் கட்சியை சேர்ந்த 8 மாவட்டச் செயலாளர்கள் உள்பட சுமார் 2 ஆயிரம் பேர்களும், மாற்றுக் கட்சியில் இருந்து பலரும் ஆக மொத்தம் 3 ஆயிரம் பேர் இன்று அக்கட்சியில் இருந்து விலகி அண்ணா அறிவாலயம் சென்று தி.மு.க. தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்.

அவர்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கறுப்புசிகப்பு துண்டு அணிவித்து வரவேற்றார். இவர்கள் தி.மு.க.வில் சேர்ந்ததற்காக கையெழுத்திட்ட உறுப்பினர் படிவம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் வழங்கப்பட்டது. தி.மு.க. இணைந்த நாம் தமிழர் கட்சியினர் முதலமைச்சருக்கு பெரியார் சிலையை அன்பளிப்பாக வழங்கினார்கள்.

இதில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசும்போது கூறியதாவது:

தி.மு.க. என்பது நேற்று முளைத்த காளான் அல்ல. 1949ல் தி.மு.க.வை அண்ணா உருவாக்கிய காலத்திலே அவர் சொன்னார். தி.மு.க. ஆட்சிக்காக மட்டுமல்ல, மக்களுக்கு பணியாற்ற வேண்டும். ஏழை எளியவர்களுக்கு தொண்டாற்ற வேண்டும். ஒடுக்கப்பட்ட மக்களுக்காக பாடுபட வேண்டும். ஒட்டுமொத்த தமிழகத்துக்காக உழைத்திட வேண்டும் என்ற உணர்வோடுதான் இந்த இயக்கம் தொடங்கப்படுகிறது என்று கூறினார்.

அதற்கு பிறகு படிப்படியாக கழகம் வளர்ந்து 57ம் ஆண்டு தேர்தல் களத்துக்கு வந்தோம். ஆனால் இன்றைக்கு சில கட்சிகளை பார்க்கிறோம். தொடங்கிய உடனே ஆட்சிக்கு வருவோம் என்று சொல்லக்கூடிய நிலை இன்றைக்கு நாட்டில் இருந்து கொண்டிருக்கிறது.

நாங்கள்தான் அடுத்த ஆட்சி. நாங்கள்தான் அடுத்த முதலமைச்சர் என்று அனாதை நிலையில் சுற்றிக் கொண்டிருப்பவர்கள் எல்லாம் பிதற்றிக் கொண்டிருக்கிறார்கள். நான் யார்? எப்படிப்பட்டவர்? எந்த கட்சி? எந்த கட்சி தலைவர்? என்றெல்லாம் சொல்ல விரும்பவில்லை. காரணம் அவர்களுக்கெல்லாம் நான் அடையாளம் காட்டுவதற்கு தயாராக இல்லை.

அவர்கள் பெயரை சொல்லி இந்த மேடைக்கு உரிய கவுரவத்தை நான் குறைத்துக் கொள்ள விரும்பவில்லை. அதுதான் உண்மை. மக்களுக்கு எதுவும் செய்யாமல் கட்சி தொடங்கியவுடன் ஆட்சிக்கு வர ஆசைப்படுகிறார்கள்.

நானாக இருந்தாலும், உதயநிதியாக இருந்தாலும் சரி என்ன சொன்னோம். மாற்றுக் கட்சி என்றுதான் சொன்னோம். அந்த கட்சியோட பெயரைக்கூட சொல்ல எங்கள் வாய் வரவில்லை.

உண்மையிலேயே மக்களுக்காக தமிழுக்காக பாடுபடக் கூடியவர்களாக இருந்தால் அவர்களின் கட்சியின் பெயரை கூறலாம். வேஷம் இட்டு நாடகத்தை நடத்திக் கொண்டிருக்க கூடியவர்களின் பெயரை அடையாளம் காட்ட நான் விரும்பவில்லை.

அண்ணா மறைவுக்கு பிறகு கருணாநிதி 5 முறை ஆட்சியில் இருந்தார். அதற்குப் பிறகு இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் உங்களால் அடையாளம் காணப்பட்டு முதலமைச்சர் பதவிக்கு வந்திருக்கின்றேன். திராவிட மாடல் ஆட்சி என்றால் ஒரே ஒரு அடையாளம் தான் இங்கு கூடி இருக்கக்கூடிய நீங்கள்தான் அதற்கு அடையாளம். இதுதான் திராவிட மாடல்... திராவிட மாடல் என்று கூறினாலே சிலருக்கு ஆவேசம் வந்து விடுகிறது.



கோபம் வரட்டும் ஆவேசம் வரட்டும் அப்படி வந்தால் தொடர்ந்து நாங்கள் திராவிட மாடல் என்று கூறிக் கொண்டே இருப்போம். அதற்கு பயந்து நாங்கள் மூலையில் போய் பயந்து விட மாட்டோம். நீங்கள் சொல்ல சொல்ல தான் தி.மு.க மேலும் வளர்ந்து கொண்டிருக்கிறது.

நீங்கள் தரகுறைவாக பேச பேச தான் உங்களிடம் இருந்து அனைவரும் இங்கு வந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆளுநர் தேவையில்லாத வேலை எல்லாம் செய்கிறார். நம்மை எதிர்த்து பேசிக்கொண்டு வருகிறார். திராவிடம் என்ற சொல்லுக்கு எதிராக பேசிக்கொண்டு வருகிறார்.

மதத்தை மையமாக வைத்துக் கொண்டு பேசி வருகிறார். என்றெல்லாம் வருத்தப்படுவதுண்டு ஆனால் பேசட்டும். அவர் பேச பேச தான் நமக்கு ஆதரவு அதிகமாகி கொண்டு இருக்கிறது. இதுவரையிலும் சட்டமன்றத்தில் ஆளுநரை மாற்ற வேண்டும் என்று தீர்மானம் போட்டு இருக்கிறோமா?

அடுத்த முறையும் ஆளுநர் சட்டமன்றத்திற்கு வர வேண்டும். ஆளுநர் உரையை நாங்கள் கொடுப்போம் வாசிக்காமல் போகட்டும். மக்கள் அதை பார்க்கட்டும்.

பிரதமர் இடத்திலும் அமித்ஷாவிடத்திலும் ஒரு வேண்டுகோள் வைக்கிறேன் தயவு செய்து ஆளுநரை மாற்றாதீர்கள்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை ஆயிரம் ரூபாய் வழங்கி வருகிறோம்.

இந்தத் திட்டத்தில் ஆங்காங்கே குறை இருக்கிறது. அந்தக் குறையும் தீர்க்கப்படும் என்று துணை முதலமைச்சர் உதயநிதி சட்டமன்றத்தில் உறுதி கொடுத்திருக்கிறார்.

நீங்கள் யாரை நம்பி சென்று அந்த நம்பிக்கை வீணாய் போனது என்று இங்கு வந்திருக்கிறீர்களோ அவர்கள் இன்னும் பேசட்டும்.

தொடர்ந்து பேசிக்கொண்டே இருந்ததால் மக்கள் தெளிவாக புரிந்து கொள்வார்கள். எதைப் பற்றியும் கவலைப்பட தேவையில்லை.

தமிழ் மக்களுக்காகவும், தமிழ் நாட்டிற்காகவும் உழைக்கும் இயக்கம் தி.மு.க. பவள விழா கண்ட இயக்கம் தி.மு.க. மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை தி.மு.க. அரசு நிறைவேற்றி வருகிறது. 7வது முறையாக தி.மு.க. நிச்சயம் ஆட்சி அமைக்கும். தி.மு.க. அரசின் திட்டங்களால் தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பமும் பயன் பெற்று வருகிறது. தி.மு.க. அரசின் சாதனைகளை தமிழக மக்கள் புரிந்து கொண்டுள்ளனர். 2026ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் 234 தொகுதிகளிலும் தி.மு.க. கூட்டணி வெற்றி பெறும். அதற்காக உழைப்போம்.

இவ்வாறு அவர் பேசினார்.

இதில் பொதுச் செயலாளர் துரைமுருகன், அமைச்சர் அன்பில் மகேஷ், தி.மு.க. செய்தி தொடர்பு குழு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு, ராஜீவ்காந்தி உள்பட பலர் பங்கேற்றனர்.

## ஊழியர்களை கைது செய்த ஹவுதி: ஏமனில் செயல்பாடுகளை நிறுத்திய ஐ.நா.




சனா, ஜன.26

இஸ்ரேல், ஹமாஸ் ஆயுதக்குழு இடையே ஓராண்டுக்கு மேல் நீடித்து வந்த போர் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. இந்த போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். இதனிடையே, இப்போரில் ஹமாஸ் ஆயுதக்குழுவுக்கு ஏமனில் செயல்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஆதரவு அளித்து வருகின்றனர். மேலும், ஹமாசுக்கு ஆதரவாக செங்கடல் பகுதியில் செல்லும் சரக்கு கப்பல்கள் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தினர். மேலும், இஸ்ரேல் மீதும் அவ்வப்போது டிரோன், ஏவுகணை தாக்குதல் நடத்தினர். மேலும், ஏமனில் தங்கள் கட்டுப்பாடில் உள்ள பகுதியில் செயல்பட்டு வந்த ஐ.நா. அமைப்பின் ஊழியர்களையும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கைது செய்துள்ளனர். தன்னார்வு தொண்டு நிறுவனங்களை சேர்ந்த ஊழியர்களையும் கைது செய்துள்ளனர்.

இந்நிலையில், ஏமனில் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் அனைத்து செயல்பாடுகளையும் நிறுத்துவதாக ஐ.நா. அமைப்பு தெரிவித்துள்ளது. தங்கள் அமைப்பின் ஊழியர்களை ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கைது செய்துள்ளதால் இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

## அமெரிக்காவில் 500க்கும் மேற்பட்ட சட்டவிரோத குடியேறிகள் கைது ராணுவ விமானம் மூலம் நாடுகடத்தல்




வாஷிங்டன், ஜன.26

அமெரிக்காவின் ஜனாதிபதியாக கடந்த 20ம் தேதி பொறுப்பேற்ற டிரம்ப், அதிரடி நடவடிக்கைகளை தொடங்கி உள்ளார். குறிப்பாக, சட்டவிரோத குடியேற்றத்தை தடுப்பதில் தீவிரம் காட்டுகிறார். இதற்கான நிர்வாக உத்தரவில் கையெழுத்திட்டு பணிகளை முடுக்கி விட்டுள்ளார். அதன்படி சட்டவிரோத குடியேறிகளை அடையாளம் கண்டு கைது செய்யும் பணிகளில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

முதற்கட்டமாக 538 பேர் கைது செய்யப்பட்டு, அவர்களில் நுற்றுக்கும் மேற்பட்டோர் ராணுவ விமானங்கள் மூலம் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பாக வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் கரோலின் லீவிட் கூறியிருப்பதாவது:

சட்டவிரோதமாக குடியேறிய 538 குற்றவாளிகளை டிரம்ப் நிர்வாகம் கைது செய்தது. இதில் ஒருவர் பயங்கரவாதி என சந்தேகிக்கப்படும் நபர், ட்ரென் டி அரகுவா கும்பலைச் சேர்ந்த நான்கு உறுப்பினர்கள் மற்றும் சிறார்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களில் ஈடுபட்ட பல சட்டவிரோதக் குற்றவாளிகள் ஆகியோரும் அடங்குவர். டிரம்ப் நிர்வாகம் நூற்றுக்கணக்கான சட்டவிரோத குடியேறிகளை ராணுவ விமானங்கள் மூலம் நாடு கடத்தி உள்ளது. வரலாற்றில் மிகப்பெரிய நாடுகடத்தல் நடவடிக்கை சிறப்பாக நடைபெற்று வருகிறது. அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுகின்றன.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

இதுதொடர்பாக வெள்ளை மாளிகையின் டுவிட்டர் தளத்திலும் தகவல் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதில், நமது நாட்டின் எல்லைகளைப் பாதுகாக்க டிரம்ப் நிர்வாகம் செய்து வரும் பணியின் ஒரு சிறிய முன்னோட்டம் மட்டுமே இது என்று கூறி உள்ளது. அமெரிக்க குடிவரவு மற்றும் சுங்க அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்ட சிலரின் பெயர்களையும், அவர்கள் செய்த குற்றங்களையும் குறிப்பிட்டுள்ளது.

## 'வடகொரிய அதிபர் கிம் புத்திசாலி' டிரம்ப் புகழாரம்



வாஷிங்டன், ஜன.26

அமெரிக்காவின் 47வது ஜனாதிபதியாக குடியரசுகட்சியை சேர்ந்த டொனால்டு டிரம்ப், கடந்த 20ந்தேதி பதவியேற்றார். ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் பல்வேறு அதிரடி அறிவிப்புகளை அவர் வெளியிட்டார்.

இந்த நிலையில், வடகொரிய அதிபர் கிம் புத்திசாலி என்று அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் புகழாரம் சூட்டியுள்ளார். சமீபத்தில் தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டி ஒன்றில் டிரம்ப் இதனை தெரிவித்தார்.

மேலும் வடகொரிய அதிபர் ஒரு மத வெறியர் அல்ல என்று குறிப்பிட்ட டிரம்ப், விரைவில் அவரை தொடர்பு கொண்டு பேச உள்ளதாக தெரிவித்துள்ளார்.

# சென்னை துறைமுகம் சட்டமன்ற தொகுதியில் குடிசை வாழ் மக்களுக்கு புதிய வீடுகள்: அமைச்சர் சேகர்பாபு உறுதி

சென்னை, ஜன.26

சென்னை துறைமுகம் சட்டமன்ற தொகுதியின் மண்டலம்5, 56வது வார்டில்பிராட்வேடான்பாஸ்கோ பள்ளிபகுதியில்உள்ள புனித சேவியர்தெரு மற்றும் பிடாரியார்கோயில் தெருவில் குடிசை வாழ் மக்களுக்கு தற்காலிக வீடு ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சர் சேகர்பாபு மற்றும் மேயர் பிரியா தலைமையில் 105 குடும்பங்களுக்கு வீட்டு ஒதுக்கீட்டு ஆணைகள் வழங்கப்பட்டன. இதனுடன், அவற்றுக்குத் தேவையான அரிசி, மல்லிகை பொருட்கள், ரூ. 25,000 ரொக்க உதவி, மற்றும் அந்த வீடுகளில் குடியேறும் வரை மாதம் ரூ. 2,500 வழங்கப்படும் என உறுதி செய்யப்பட்டது. அந்த பகுதிக்குள் குடியமர்த்தும் நடவடிக்கைகள் இந்த ஆண்டிற்குள் நிறைவேற்றப்படும் என அமைச்சர் உறுதிமொழி அளித்தார்.



# தொழில்முறை படிப்புகளில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு இடஒதுக்கீடு: அரசு சாதனை அமைச்சர் கோவி.செழியன்

சென்னை, ஜன.26

அரசுப் பள்ளி மாணவர்களுக்குப் பொறியியல், மருத்துவம், வேளாண்மை உள்ளிட்ட அனைத்து தொழில்முறை படிப்புகளிலும் 7.5 சதவீத இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்தி அரசு சாதனை படைத்துள்ளது என்று உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

இந்தியாவிலேயே தமிழ்நாட்டை உயர்கல்வியில் முதன்மை மாநிலமாக உயர்த்தி பல்வேறு சாதனைகளைத் திராவிட மாடல் அரசு படைத்து வருகிறது.

திராவிட மாடல் அரசின் 'புதுமைப் பெண்' திட்டத்தின் மூலம் பெண்கள் உயர்கல்வி பயிலும் எண்ணிக்கை உயர்ந்துள்ளதை பல ஆய்வுகள் மெய்பித்துள்ளன. அதே போல மாணவர்களுக்கான 'தமிழ் புதல்வன்' திட்டத்தை செயல்படுத்தி மாணவர்கள் தங்கள் உயர்கல்வி கனவை எந்த இடையூறும் இல்லாதவாறு சாதிக்க சாத்தியப்படுத்தியுள்ளார் தமிழ்நாடு முதல்அமைச்சர்.



இத்திட்டங்களை போலவே அரசுப்பள்ளி மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்புகளை உயர்த்தவேண்டும், உயர் கல்வி சேர்க்கையில் அவர்களுக்கான உரிய வாய்ப்புகள் கிடைக்கவேண்டும் எனும் நோக்கத்துடன் அரசுப் பள்ளி மாணவர்களுக்குப் பொறியியல், மருத்துவம், வேளாண்மை உள்ளிட்ட அனைத்து தொழில்முறை படிப்புகளிலும் 7.5 சதவீத இடஒதுக்கீட்டை திராவிட மாடல் அரசு செயல்படுத்தும் என 20.9.2021 அன்று முதல்அமைச்சர் அறிவித்தார்.

2021ம் ஆண்டு நவம்பர் மாதம் அரசாணை வெளியிடப்பட்டு அரசு பள்ளி மாணவர்களுக்கான இட ஒதுக்கீடு உடனடியாக நடைமுறைப் படுத்தப்பட்டது. இந்த முன்முயற்சியின்கீழ், அரசுப் பள்ளி மாணவர்களுக்கான கல்விக் கட்டணம், விடுதி மற்றும் போக்குவரத்துக் கட்டணம் உள்ளிட்ட மொத்த கல்விச் செலவினையும் அரசே ஏற்றுக்கொண்டுள்ளது.

கடந்த நான்கு கல்வியாண்டுகளில், இத்திட்டத்தின் கீழ் 1,165 கோடி ரூபாய்க்கு மேல் விடுவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 40,168 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். அரசுப்பள்ளி மாணவர்கள் உயர்கல்வி பயில்வதில் எத்தகைய இடையூறையும் எதிர்கொண்டு விடக்கூடாது எனும் முதல்அமைச்சரின் அக்கறை உள்ள நடவடிக்கையினால் இந்த சாதனை நிகழ்ந்திருக்கிறது.

குறிப்பாக தொழிற்படிப்புகளில் 35,530 பேர், மருத்துவம் சார்ந்த படிப்புகளில் 2,382 பேர், வேளாண் படிப்புகளில் 1,369 பேர், கால்நடை மற்றும் மீன்வளம் சார்ந்த படிப்புகளில் 261 பேர், சட்டப் படிப்புகளில் 626 பேர் என மொத்தம் 40,168 அரசுப்பள்ளி மாணவர்கள் கடந்த நான்காண்டுகளில் இந்த இடஒதுக்கீட்டினால் பயனடைந்துள்ளார்கள்.

எல்லோருக்கும் எல்லாம் எனும் சமூக நீதிக் கண்ணோட்டத்தை அரசியல் லட்சியமாக கொண்டு செயலாற்றி வரும் திராவிட மாடல் அரசு அனைவருக்கும் வாய்ப்புகள் பாகுபாடின்றி கிடைக்க வேண்டும் என்பதில் எப்போதும் உறுதியாக இருக்கின்றது. தமிழ்நாட்டு மாணவச் செல்வங்களை பொறுத்தவரை அவர்களுக்கு தந்தையாக இருந்து அவர்களுக்கான திட்டங்களை உள்ளார்ந்த அன்போடும் அக்கறையோடும் நடைமுறைப்படுத்திவருகிறார் முதல்அமைச்சர்.

தமிழ்நாட்டின்தெருக்களில்முதல் அமைச்சர் நடக்கும் தருணமெல்லாம் அவரை அப்பா! அப்பா! என உள்ளன்போடுதமிழ்நாட்டின்மாணவச் செல்வங்கள் அழைத்து மகிழ்வதுமுதல்அமைச்சரின்இதுபோன்ற போன்ற சாதனைகளால்தான். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# காட்டுமன்னார்கோவிலில் மத்திய குழுவினர் ஆய்வு விரைவில் இழப்பீடு வழங்க விவசாயிகள் வலியுறுத்தல்



காட்டுமன்னார் கோவில், ஜன.26

கடலூர் மாவட்டத்தில் கடந்த சில நாட்களுக்கு முன்பு பெய்த மழை மற்றும் ஃபெஞ்சல் புயல் காரணமாக விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டது.

இதனால் விவசாயிகள் பெரிதும் அவதியடைந்தனர். பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

இதுகுறித்து மத்திய அரசுக்கு, தமிழக அரசு கடிதம் எழுதியது. இதனையடுத்து, கடந்த 2 நாட்களாக டெல்டா மாவட்டத்தில் மத்திய குழுவினர் ஆய்வு செய்தனர்.

நேற்று முன்தினமும், நேற்றும் தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை மாவட்டங்களில் மழையால் சேதம் அடைந்த பயிர்களை பார்வையிட்டனர். கடலூர் மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களை பார்வையிட்டனர்.

மத்திய உணவு துறையின் சேமிப்பு மற்றும் ஆராய்ச்சி பிரிவு உதவி இயக்குனர் நவீன் தலைமையில் உதவி இயக்குனர் பிரித்தி, தொழில்நுட்ப அலுவலர்கள் ராகுல், அபிஷேக்பாண்டே, சென்னை எப்.சி.ஐ. தரக்கட்டுபாடு மேலாளர் பாஸ்கர் குமார் ஆகியோர் கொண்ட குழுவினர் இன்று காட்டுமன்னார் கோவில் பகுதியில் மழையால் சேதமடைந்த நெற்பயிர்களை பார்வையிட்டனர்.

முதலில் முட்டத்தில் அவர்கள் பாதித்த பயிர்களை பார்வையிட்டனர். பின்னர் ராஜேந்திர சோழகன் கிராமத்திற்கு சென்றனர். அங்கு சேதமடைந்த நெற்பயிர்களை ஆய்வு செய்தனர். அவர்களிடம் விவசாயிகள் பாதிக்கப்பட்ட பகுதிகளை கணக்கெடுத்து விரைவில் தங்களுக்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

# அ.தி.மு.க. பொதுக்கூட்டத்தில் நாற்காலிகளை தூக்கிச் சென்ற பொதுமக்கள்



கோவை, ஜன.26

முன்னாள் முதல்அமைச்சர் எம்.ஜி.ஆரின் 108வது பிறந்த நாளை முன்னிட்டு தமிழகம் முழுவதும் அ.தி.மு.க. சார்பில் பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது.

அதேபோல கோவை சிங்காநல்லூர் தொகுதிக்கு உட்பட்ட பீளமேடு ரொட்டிக் கடை மைதானத்தில் கோவை மாநகர எம்.ஜி.ஆர். இளைஞர் அணி சார்பில் நேற்று பொதுக்கூட்டம் நடந்தது.

கூட்டத்தில் எம்.எல்.ஏ.க்கள் அம்மன் அர்ச்சுனன், கே.ஆர். ஜெயராம், சினிமா டைரக்டர்கள் ஆர்.வி. உதயகுமார், அனுமோகன், மாநில மாணவர் அணி செயலாளர் சிங்கை ராமச்சந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் ஏழை பெண்களுக்கு இலவச தையல் எந்திரங்கள், சலவை பெட்டிகள் மற்றும் வீட்டு உபயோக பொருட்கள் நலத்திட்ட உதவிகளாக வழங்கப்பட்டன.

பொதுக்கூட்டத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். அவர்கள் அமருவதற்காக புத்தம் புது நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. அவற்றில் அமர்ந்தபடியே பொதுமக்கள் பொது க்கூட்டத்தை பார்த்துக் கொண்டிருந்தனர்.

கூட்ட முடிவில் அவர்களுக்கு இன்ப அதிர்ச்சி காத்திருந்தது. சிங்காநல்லூர் தொகுதி எம்.எல்.ஏ.வான கே.ஆர். ஜெயராம் திடீரென எழுந்து பேசத் தொடங்கினார். அவர் பேசுகையில் பொதுமக்கள் அவரவர் அமர்ந்திருக்கும் நாற்காலிகளை அவர்கள் வீட்டுக்கே எடுத்துச் செல்லலாம், இதனை தான் அன்பளிப்பாக வழங்குவதாக தெரிவித்தார்.

இதனால் மகிழ்ச்சி அடைந்த ஆண்களும், பெண்களும் தாங்கள் அமர்ந்திருந்த இருக்கைகளை அப்படியே தூக்கிக் கொண்டு வீட்டுக்கு நடையை கட்டினர். சிலர் 2, 3 நாற்காலிகளை தலையில் சுமந்தபடி அங்கிருந்து மகிழ்ச்சியுடன் புறப்பட்டுச் சென்றனர்.

நூற்றுக்கணக்கானோர் ஒரே நேரத்தில் நாற்காலிகளுடன் அங்கிருந்து புறப்பட்டது பரபரப்பை ஏற்படுத்தியது. அதேசமயம் பொதுக்கூட்டம் மகிழ்ச்சியுடன் தொடங்கி மகிழ்ச்சியுடன் நிறைவு பெற்றது.

# வங்கியில் ரூ.4 கோடி கொள்ளை வழக்கு: கைதான கொள்ளையன் வீட்டில் 16 கிலோ தங்கம் பறிமுதல்



களக்காடு, ஜன.26

கர்நாடக மாநிலம் மங்களூரு அருகே உல்லால் போலீஸ் எல்லைக்குட்பட்ட கே.சி. ரோடு பகுதியில் விவசாய கூட்டுறவு வங்கி உள்ளது.

இந்த வங்கியில் கடந்த 17ந்தேதி மதியம் முகமூடி அணிந்து வந்த 4 பேர் கும்பல் அங்கிருந்த வங்கி ஊழியர்கள் 5 பேரை அரிவாள், துப்பாக்கியை காண்பித்து மிரட்டி சுமார் ரூ.4 கோடி மதிப்புள்ள தங்க நகை மற்றும் ரொக்கப் பணத்தை அள்ளி சென்றனர்.

இதுகுறித்து தகவல் அறிந்த உல்லால் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். மேலும் குற்றவாளிகளை பிடிக்க 8க்கும் மேற்பட்ட தனிப்படை அமைக்கப்பட்டு தமிழகம், கேரளம், மராட்டியம் உள்ளிட்ட வெளி மாநிலங்களுக்கும் சென்றது.

இந்த நிலையில் இந்த கொள்ளை சம்பவத்தில் நெல்லை மாவட்டம் களக்காடு அருகே உள்ள பத்மநேரி கிராமத்தைச் சேர்ந்த முருகாண்டி (வயது 36), ஜோசுவா ஆகிய 2 பேரை களக்காட்டில் மங்களூரு போலீசார் 2 நாட்களுக்கு முன்பு கைது செய்தனர். அவர்களிடம் இருந்து 2 கிலோ தங்கம், ரூ.3 லட்சம் ரொக்கப்பணம், மும்பை பதிவு எண் கொண்ட கார் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் 2 துப்பாக்கி, 3 குண்டுகள், ஒரு கார் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது.

இந்நிலையில் இதில் தொடர்புடைய கண்ணன் மணி என்பவரும் போலீசாரால் கைது செய்யப்பட்டார்.

அவர்கள் 3 பேரும் கர்நாடகா சிறப்பு போலீஸ் படையினரிடம் தெரிவித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் இன்ஸ்பெக்டர் ராஜேந்திரன் தலைமையிலான போலீசார் நெல்லை வந்தனர்.

அவர்கள் இரவோடு இரவாக முருகாண்டியின் வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த சுமார் 16 கிலோ எடை கொண்ட வங்கியில் கொள்ளையடிக்கப்பட்ட தங்க நகைகளை கைப்பற்றி உள்ளனர். இதுதொடர்பாக முருகாண்டியின் தந்தையிடம் போலீசார் விசாரித்து வருகின்றனர்.

# குடியரசு தின விழா: தருமபுரி ரெயில் நிலையங்களில் போலீசார் தீவிர சோதனை



தருமபுரி, ஜன.26

நாடு முழுவதும் வருகிற 26ந் தேதி குடியரசு தின விழா கொண்டாடப்பட உள்ளது. இதையொட்டி நாடு முழுவதும் ரெயில் நிலையங்கள், பஸ் நிலையங்கள் உள்பட மக்கள் கூடும் இடங்களில் பாதுகாப்பை பலப்படுத்த மத்திய அரசின் உளவுத்துறை அறிவுறுத்தி உள்ளது.

அதன்படி தருமபுரி நகரம் மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள ரெயில் நிலையங்கள், பஸ் நிலையங்கள், வழிபாட்டு தலங்கள் உள்பட மக்கள் கூடும் இடங்களில் போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இதையொட்டி தருமபுரி ரெயில் நிலையத்தில் ரெயில்வே போலீசார் 24 மணி நேரமும் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இதைத்தொடர்ந்து இன்று காலை எக்ஸ்பிரஸ் ரெயில்கள் பேசஞ்சர் உள்ளிட்ட ரெயில்களில் சோதனை நடத்தினர்.

அப்போது ரெயில்நிலையத்திற்கு வந்த பயணிகளின் உடமைகள் ரெயில் நிலைய நுழைவு வாயில், பார்சல் அலுவலகம், நடைமேடைகள் வாகனம் நிறுத்தும் இடங்கள் சோதனை செய்து பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.


# ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல்: 268 துப்பாக்கிகள் போலீசிடம் ஒப்படைப்பு

ஈரோடு, ஜன.26

ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் பிப்ரவரி 5ந் தேதி நடைபெறும் என கடந்த 7ந் தேதி அறிவிப்பு வெளியானது. அதைத்தொடர்ந்து தேர்தல் நடத்தை விதிமுறைகள் உடனடியாக அமலுக்கு வந்தது. இதனையடுத்து பாதுகாப்பு நடவடிக்கைகளை மாவட்ட நிர்வாகம் மேற்கொண்டு வருகிறது.

இதில் முதற்கட்டமாக ஈரோடு கிழக்கு தொகுதிக்குள் உரிமம் பெற்று தற்காப்பிற்காக வைத்துள்ள ஒற்றைக்குழல், இரட்டைக் குழல் துப்பாக்கிகள், ரைப்பிள், பிஸ்டல் போன்ற துப்பாக்கிகளை உரிமையாளர்கள் உடனடியாக போலீசிடம் ஒப்படைக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டு இருந்தது. இதன் பேரில் இடைத்தேர்தல் நடக்கும் ஈரோடு கிழக்கு தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் உரிமம்பெற்ற286துப்பாக்கிகள் உள்ளன. இதில் கருவூல பாதுகாப்பு, வங்கி பாதுகாப்பு உள்ளிட்ட அத்தியாவசிய பாதுகாப்பு பணிக்கு 18 துப்பாக்கிகளுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதைத்தொடர்ந்து 268 துப்பாக்கிகளை அதன் உரிமையாளர்கள் போலீசாரிடம் ஒப்படைத்தனர். அந்த துப்பாக்கிகள் பாதுகாப்பு மையத்தில் வைக்கப்பட்டுள்ளது. தேர்தல் நடத்தை விதிமுறைகள் வாபஸ் ஆனதும் உரிமையாளர்களிடம் மீண்டும் துப்பாக்கிகள் ஒப்படைக்கப்படும் என போலீஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# தமிழ்நாட்டின் அடையாளங்களை அழிக்க முயற்சி செய்கிறார் ஆளுநர்: உதயநிதி ஸ்டாலின் தாக்கு



சென்னை, ஜன.26

சென்னை அண்ணா அறிவாலயத்தில் 3000க்கும் மேற்பட்ட நா.த.க உள்ளிட்ட மாற்றுக் கட்சியினர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர். அப்போது உரையாற்றிய துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூறியதாவது:

நீங்கள் கழகத்தின் கொள்கையை ஏற்று இயக்கத்தில் சேர்ந்திருக்கின்றீர்கள். தி.மு.க. இன்று 75வது ஆண்டில் பவள விழாவை கொண்டாடிக் கொண்டிருக்கிறது.

நீங்கள்வந்துவிட்டீர்கள், ஆனால் உங்களைப் போல ஆயிரக்கணக்கானோர் வருவதற்கு சில தயக்கத்தோடு அங்கு இருப்பார்கள். அவர்களிடம் எடுத்துச்சொல்லி, அத்தனை பேரையும் கழகத்தில் இணைக்க வேண்டிய முயற்சியில் நீங்கள் ஈடுபட வேண்டும்.

சட்டசபை தேர்தல் நேரத்தில் பொதுவாக ஆளும் கட்சியில் இருந்து எதிர்க்கட்சியில்தான் போய் சேர்வார்கள். ஆனால் வித்தியாசமாக இன்று எதிர்க்கட்சியில் இருந்து ஆளும் கட்சியில் சேர்ந்துள்ள உங்களுக்கு எதிர்வரும் தேர்தலின் முடிவு தெரிந்து இருக்கும்.

உங்களை பார்த்தால் எதிர்க்கட்சிகளுக்கு வயிறு எரியத்தான் செய்யும்.

தமிழ்நாட்டின் அடையாளங்களை அழிக்க ஆளுநர் முயற்சி செய்கிறார். திருவள்ளுவருக்கு காவி சாயம் பூசுவது, தமிழ்த் தாய் வாழ்த்தை கொச்சைப்படுத்துவது,

தமிழ்த்தாய் வாழ்த்து பாடக்கூடாது என்று சட்டசபையில் சொல்வது, சட்டசபையை புறக்கணித்து செல்வது இதுதான் அவருடைய வேலை என்று அவர் கூறினார்.

# பாம் சரவணனை ஆந்திராவுக்கு அழைத்து சென்று விசாரிக்க போலீசார் முடிவு



போரூர், ஜன.26

சென்னை புளியந்தோப்பு, பகுதியை சேர்ந்தவர் சரவணன் என்கிற பாம் சரவணன். ரவுடியான இவர்மீது 6 கொலை, கொலை முயற்சி வெடிகுண்டு வீசியது உள்ளிட்ட பல்வேறு வழக்குகள் உள்ளது. இவரது சகோதரரும் அரசியல் கட்சி ஒன்றின் மாவட்ட செயலாளருமான தென்னரசு என்பவர் கடந்த 2015ம் ஆண்டு வெங்கல் பகுதியில் மர்ம கும்பலால் வெட்டி கொலைசெய்யப்பட்டார்.

தனது அண்ணனை கொலை செய்த கும்பலை பழி தீர்க்க திட்டம் தீட்டி வந்த பாம் சரவணன் வழக்கு விசாரணைக்கு நீதிமன்றத்தில் ஆஜராகாமல் திடீரென தலைமறைவானார். கைது வாரண்ட் பிறப்பிக்கப்பட்டு கடந்த 6 ஆண்டுகளாக போலீசில் சிக்காமல் தொடர்ந்து தலைமறைவாக இருந்து வந்த பாம் சரவணனை கடந்த 15ந் தேதி புளியந்தோப்பு பகுதியில் பதுங்கி இருந்தபோது போலீசார் சுற்றி வளைத்தனர்.

அப்போது போலீசார் மீது நாட்டு வெடிகுண்டுகளை வீசி தாக்குதல் நடத்தி தப்ப முயன்ற பாம் சரவணனை போலீசார் இடது காலில் சுட்டு பிடித்தனர். இதில் காயமடைந்த அவருக்கு ஸ்டான்லி அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

தனது அண்ணன் தென்னரசு கொலை வழக்கில் தொடர்புடைய கோயம்பேட்டை சேர்ந்த ரவுடியான செல்வம் என்கிற பன்னீர்செல்வத்தை கடந்த 2018ம் ஆண்டு பாம் சரவணன் தனது கூட்டாளிகளுடன் சேர்ந்து கடத்தி சென்று ஆந்திர மாநிலம் கூடூரில் உள்ள ஆற்றங்கரையோரம் வைத்து கொன்று எரித்ததாக போலீசில் பரபரப்பு வாக்குமூலம் அளித்தார். இதையடுத்து ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் பாம் சரவணனை கோயம்பேடு பஸ் நிலைய போலீசார் ஆந்திர மாநிலம் கூடூர் அழைத்துச் சென்று விசாரணை நடத்த திட்டமிட்டுள்ளனர். மேலும் அதை வீடியோவாக பதிவு செய்து நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க உள்ளனர். இது தொடர்பாக ஆந்திர மாநில போலீசார் மற்றும் ஆந்திர வருவாய்த்துறை அதிகாரிகளுக்கு சென்னை போலீசார் தரப்பில் தகவல் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# மிகப்பெரிய விமானம் 124 டன் சரக்குடன் சென்னை வந்தது



ஆலந்தூர், ஜன.26

அமெரிக்காவை தலைமை இடமாகக் கொண்டு செயல்படும் நேஷ்னல் ஏர்லைன்ஸ் விமான நிறுவனம் சரக்கு விமானங்களை இயக்கி வருகிறது. இந்த நிறுவனத்தைச் சேர்ந்த, பெரிய ரக சரக்கு விமானங்களில் ஒன்றான 747400 ரக சரக்கு விமானம், ஜோர்டான் நாட்டின் அம்மான் விமான நிலையத்தில் இருந்து, சுமார் 124 டன் சரக்குகளுடன் புறப்பட்டு, சென்னை சர்வதேச விமான நிலைய சரக்ககம் பகுதிக்கு வந்து தரை இறங்கியது.

வானத்தின் இளவரசி என்று அழைக்கப்படும் இந்த மிகப்பெரிய சரக்கு விமானம் சென்னையில் தரை இறங்கியது சென்னைவிமானநிலைய சரக்கக பகுதியில் உற்சாகத்தை ஏற்படுத்தியது. உடனடியாக சரக்கக பகுதி ஊழியர்கள் விரைந்து செயல்பட்டு, விமானத்தில் வந்த சரக்குகளை இறக்கினர்.

மேலும் சென்னையில் இருந்து துபாய் உள்ளிட்ட ஐக்கிய அரபு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டிய சரக்குகளையும் துரிதமாக ஏற்றி இறக்கும் பணிகளில் ஈடுபட்டனர்.

பின்னர் அந்த சரக்கு விமானம் சென்னையில் இருந்து துபாய் வழியாக ஐக்கிய அரபு நாடுகளுக்கு புறப்பட்டு சென்றது.

இந்த சரக்கு விமானம் சுமார் 125 டன் சரக்குகளை ஒரே நேரத்தில் கையாளக்கூடியது. அதுமட்டுமின்றி இது பயணிகள் விமானமாகவும் இயக்கக் கூடியது. பயணிகள் விமானமாக இயங்கும் போது, ஒரே நேரத்தில் 660 பயணிகள் செல்ல கூடிய விமானமாக இது இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

சென்னை விமான நிலையம் சரக்குகளை திறம்பட கையாளுவதில் தற்போது உலக அளவில் சிறந்த சரக்கக விமான நிலையமாக செயல்படுவதால் இதைப் போல் வெளிநாடுகளில் இருந்து, மிகப்பெரிய ரக சரக்கு விமானங்கள், சென்னைக்கு வந்து செல்கின்றன. இது சர்வதேச சரக்கு விமான போக்கு வரத்தில், சென்னைக்கு மேலும் பெருமை சேர்க்கக்கூடியது என்று சென்னை விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

# திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் மீண்டும் ஒலிக்க உள்ள கட்டபொம்மன் காலத்து மணி



திருச்செந்தூர், ஜன.26

முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் சிறந்த பரிகார தலமாகவும், ஆன்மீக தலமாகவும் விளங்கி வருகிறது.

தற்போது கோவிலில் ரூ.300 கோடி மதிப்பிலான மெகா திட்ட வளாக பணிகள் அறநிலையத் துறை மற்றும் எச்.சி.எல் நிறுவனம் சார்பில் திருப்பணிகள் நடந்து வருகிறது.

இப்பணிகள் விரைவில் நிறைவுபெற்று வருகிற ஜூலை 7ந் தேதி கும்பாபிஷேகம் நடக்க உள்ளது.

இந்நிலையில் ராஜகோபுரம் திருப்பணிகள் வேலைகள் நடைபெற்று வருகிறது. ராஜகோபுர கலசங்கள் புதுப்பிக்கப்பட்டு பொருத்தி முடிக்கப்பட்டுள்ளது. இதில் ராஜகோபுரத்தின் ஒன்பதாவது நிலையில் கட்டபொம்மன் காலத்தில் ஒலித்த ராட்சத மணி உள்ளது.

அந்த காலத்தில் மூலவருக்கு உச்சிகால தீபாராதனை முடிந்ததும் சண்முக விலாச மண்டப முகப்பில் உள்ள மணி அடிக்கப்பட்டதும், ராஜகோபுரத்தில் உள்ள மணி அடிக்கப்படும். அதன் தொடர்ச்சியாக பாஞ்சாலங்குறிச்சி வரை கட்டபொம்மன் அமைத்த மணி மண்டபங்களில் உள்ள மணிகள் ஒன்றன் பின் ஒன்றாக ஒலிக்கும். இந்த மணிகள் வரிசையாக ஒலித்த பின் பாஞ்சாலங்குறிச்சியில் வீர ஜக்கதேவியை வணங்கி விட்டு வீரபாண்டிய கட்டபொம்மன் மதிய உணவு சாப்பிடுவது வழக்கம்.

இந்த மணி கடைசியாக 2009ம் ஆண்டு கும்பாபிஷேகத்தின் போது ஒலித்தது. அப்போது சிறிது காலம் மட்டும் ஒலித்தது. பிறகு காலப்போக்கில் மணி ஒலிப்பது நிறுத்தப்பட்டது.

தற்போது ராஜகோபுரம் திருப்பணிகளோடு ஒன்பதாவது நிலையில் உள்ள ராட்சத மணியும் புதுப்பிக்கப்பட்டு உள்ளது. இந்த கும்பாபிஷேக தினத்தன்று கட்டபொம்மன் காலத்தில் ராஜகோபுர மணி ஒலிக்க இருப்பதாக கூறப்படுகிறது.

# பொன்னேரி வட்டாட்சியர் அலுவலகம் முன்பு வருவாய் கிராம ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்



பொன்னேரி, ஜன.26

பொன்னேரி வட்டாட்சியர் அலுவலகம் முன்பு வருவாய் கிராம ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மாநில பொதுச் செயலாளர் ரவி தலைமை தாங்கினார். இதில் பொன்னேரி வட்ட தலைவர் ரவிக்குமார், பொன்னேரி வட்ட செயலாளர் செல்வகுமார், மாவட்ட துணைத்தலைவர் சங்கர், பொன்னேரி வட்ட துணைத் தலைவர் ஸ்டாலின், பொன்னேரி வட்ட துணை செயலாளர் கணேசன், மாவட்ட இணை செயலாளர் சுரேஷ்குமார், மாவட்ட செயற்குழு உறுப்பினர் ஹரிபாபு, மதன், உள்ளிட்ட 100 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தின் போது காலம் முறை ஊதியம் வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பினர்.

# ஜெகபர் அலி மரணம் போலீசார் கடமையை செய்யவில்லை என பிரேமலதா குற்றச்சாட்டு

புதுக்கோட்டை, ஜன.26

கனிம வள கொள்ளையை தடுத்த சமூக ஆர்வலர் ஜெகபர் அலி கொலை செய்யப்பட்ட சம்பவத்தை கண்டித்து புதுக்கோட்டை தாலுகா அலுவலகம் முன்பு இன்று தே.மு.தி.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா கலந்துகொண்டு பேசினார்.

விஜயகாந்தின் தம்பியாக கனிம வளக் கொள்கையை ஜெகபர் அலி தட்டி கேட்டு உள்ளார். காவல்துறை தங்கள் கடமையை செய்திருந்தால் நாங்கள் போராட வேண்டி இருக்காது. ஒரு நாளைக்கு ஒரு லட்சம் டன் கனிம வளம் கொள்ளை போய்க் கொண்டிருக்கிறது. 686 குவாரிகள் உள்ளது. உரிய அரசு அனுமதி இல்லாமலே பல குவாரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.



இங்கு முன் அனுமதி இல்லாமல், கடந்த 2 வருடமாக கனிம வளத்தை கொள்ளையடித்து, மக்களுடைய செல்வத்தை சுரண்டி நமது நாட்டையே இப்போது கேள்விக்குறியாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக இதெல்லாம் கண்டிக்கப்பட வேண்டும்.

திராவிட மாடல் ஆட்சி என்று சொல்கிறார்கள். சிறுபான்மையினரின் பாதுகாப்பு நாங்கள் என்கிறார்கள். ஒரு இஸ்லாம் குடும்பத்தை சேர்ந்தவர்கள் இங்கே பாதிக்கப்பட்டு நிற்கிறார்கள். சிறுபான்மையினரின் உற்ற தோழன் என்று தி.மு.க. சொல்கிறது. இஸ்லாமியருக்கு நாங்கள் பாதுகாவலன் என்று சொல்கிறார்கள்.

தற்போது இங்கு ஜெகபர் அலியை இழந்து நிற்கும் இந்த குடும்பத்திற்கு அவர்கள் என்ன சொல்ல போகின்றார்கள். இதற்கு அமைச்சர்களும் அதிகாரிகளும் பதில் சொல்லியே தீர வேண்டும்.

இந்த இஸ்லாமிய குடும்பத்திற்கு யாராவது ஆதரவு தெரிவிக்கிறீர்களா? ஏன் கேட்கவில்லை எல்லாம் பயம். ஆனால் தே.மு.தி.க. எதற்காகவும் பயப்படாது. நியாயத்தின் பக்கம், தர்மத்தின் பக்கம், மக்கள் பக்கம் எப்போதும் இருக்கும். இது போன்ற பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு என்றுமே பாதுகாப்பு கேப்டனின் தே.மு.தி.க. தான்.

இஸ்லாமிய சகோதரர்களே ஆளும் கட்சிக்கு பயந்து ஒதுங்க கூடாது. இந்த ஆர்ப்பாட்டத்தை கடைசி வரை கொண்டு சென்று இந்த குடும்பத்திற்கு நியாயம் குடும்பத்தில் நீதி கிடைக்கும் வரை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து முஸ்லிம்களும் ஒன்றிணைந்து இவர்களுக்கு ஆதரவாக நிற்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

ஆர்ப்பாட்டத்தில் மாநில நிர்வாகிகள் பார்த்தசாரதி, ஜாகீர், மாவட்ட செயலாளர்கள் கார்த்திகேயன், சசி, நகரச் செயலாளர் பரமஜோதி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பயன்பாட்டிற்கு வராத ஆரம்ப சுகாதார நிலையம்

படப்பை, ஜன.26

படப்பை அருகே உள்ள செரப்பணஞ்சேரி ஊராட்சியில் ஊரக வளர்ச்சித் துறை சார்பில் 15வது நிதிக் குழு மானியத்தில் துணை சுகாதார நிலையம் ரூ.35 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டது.




இந்த கட்டிட பணி முடிந்து 8 மாதங்களுக்கு மேல் ஆகியும் இன்னும் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படாமல் மூடியே கிடக்கிறது.

இதனால் இந்த புதியகட்டிடம் தற்போது சமூக விரோதிகளின் கூடாரமாக மாறி வருகிறது. எனவே துணை சுகாதார நிலையத்தை உடனடியாக திறந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

# ஸ்மார்ட் மீட்டர் பொருத்தப்பட்டதும் மாதந்தோறும் மின்கட்டணம் வசூலிப்பது அமலுக்கு வரும் அமைச்சர் தகவல்

சென்னை, ஜன.26

அமைச்சர் செந்தில் பாலாஜி சென்னையில் நிருபர்களிடம் கூறியதாவது: தி.மு.க. தேர்தல் அறிக்கையில் மாதந்தோறும் மின் கட்டணம் கணக்கிடப்படும் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டு இருந்தது. அது நிச்சயம் நிறைவேற்றப்படும். ஸ்மார்ட் மீட்டர் கொள்முதலுக்கு விரைவில் புதிய டெண்டர் விடப்படும். தமிழகம் முழுவதும் பயனீட்டாளர்களுக்கு ஸ்மார்ட்மீட்டர்கள்பொருத்தும் பணிகள் நிறைவடைந்ததும் மாதந்தோறும் மின் கட்டணம் வசூலிக்கும் நடைமுறை அமலுக்கு வரும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# வீட்டில் தனியாக இருந்த பெண்ணிடம் நகை பறித்த வாலிபர்கள் 2 கி.மீ. தூரம் விரட்டி சென்று மடக்கிய பொதுமக்கள்

பள்ளிபாளையம், ஜன.26

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் அருகே அன்னை சத்யாநகர் பகுதியில் குடிசை மாற்று வாரிய அடுக்கு மாடி குடியிருப்பு உள்ளது. இந்த குடியிருப்பின் 2வது மாடியில் மல்லிகா, என்பவர் தனியாக வசித்து வருகிறார். இவர் நேற்று மதியம் சுமார் 4 மணி அளவில் வீட்டில் சுடு தண்ணீர் வைத்து கொண்டிருந்தார்.

அப்போது 2 வாலிபர்கள் மல்லிகா வீட்டிற்குள் புகுந்து மல்லிகாவை தாக்கி அடுப்பில் வைத்திருந்த சுடு தண்ணீரை எடுத்து மல்லிகா மேல் ஊற்றி கழுத்தில் இருந்த தங்க செயினை பறித்தனர்.



மல்லிகாவின் அலறல் சத்தம் கேட்டு அருகில் இருந்தவர்கள் வருவதை பார்த்த 2 வாலிபர்களும் தப்பி ஓடினர்கள். பொது மக்கள் அனைவரும் சேர்ந்து அவர்களை விரட்டி சென்றனர். சுமார் 2 கி.மீ தூரம் விரட்டி சென்று காட்டூர் பகுதியில் 2 பேரையும் பிடித்து, தர்ம அடி கொடுத்து கயிற்றில் கட்டினார்கள்.

இது குறித்து பள்ளிபாளையம் போலீசுக்கு அப்பகுதி மக்கள் தகவல் தெரிவித்தனர். போலீசார் வந்ததும் பொது மக்கள் பிடித்து வைத்திருந்த 2 பேரை போலீசாரிடம் ஒப்படைத்தனர். சுடு தண்ணீர் ஊற்றியதில் படுகாயமடைந்த மல்லிகா பள்ளிபாளையம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

போலீஸ் விசாரணையில் பிடிப்பட்டவர்கள் தூத்துக்குடியை சேர்ந்த அப்துல் (21), சாந்தகுமார் (21), என தெரியவந்தது. இவர்களிடம் இருந்து 15 பவுன் நகை மீட்கப்பட்டது. மேலும் இந்த நகை பறிப்பில் தொடர்புள்ள மல்லிகாவின் பக்கத்து வீட்டை சேர்ந்த ஐஸ்வரியா (24), மணிமேகலை (30), ஆகிய 2 பெண்களையும் கைது செய்து விசாரணை செய்து வருகின்றனர்.

# கோவை மத்திய ஜெயிலில் கஞ்சா புழக்கம் கைதிகள் உள்பட 3 பேர் மீது வழக்கு

கோவை, ஜன.26

கோவை மத்திய ஜெயிலில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அடிதடி, கஞ்சா விற்பனை, கொலை, கொள்ளை உள்ளிட்ட பல்வேறு வழக்குகளில் தொடர்புடையவர்கள் ஆவர். ஜெயிலில் அடைக்கப்பட்டு உள்ள கைதிகள் மத்தியில் கஞ்சா புழக்கம் இருப்பதாக அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்தது. அதன்பேரில் ஜெயில் அதிகாரிகள் திடீர் சோதனையில் ஈடுபட்டனர். அப்போது திருப்ப த்தூரைச் சேர்ந்த ராஜன் என்ற கைதியிடம் இருந்து 8 கிராம் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது. அவர்களிடம் விசாரணை நடத்தியபோது ஆயுள் தண்டனை கைதியான செந்தில் என்பவர் தன்னிடம் கொடுத்ததாக தெரிவித்தார். செந்தில் கோவை கணபதியைச் சேர்ந்தவர். இவர் கடந்த 2014ம் ஆண்டு நடந்த கொலை வழக்கில் சிக்கி ஆயுள்தண்டனை பெற்றவர். செந்திலிடம் விசாரணை நடத்தியபோது திடுக்கிடும் தகவல்கள் கிடைத்தது. செந்திலுக்கு மத்திய சிறையின் மெயின் வாயிலுக்கு வெளியில் சுத்தம் செய்யும் வேலை ஒதுக்கப்பட்டிருந்தது. அப்போது சிலர் வெளியே இருந்து வரும்போது அவரிடம் கஞ்சாவை கொடுப்பதும், அதனை அவர் ஆசனவாயில் வைத்து சிறைக்குள் கடத்திச் சென்றதும் தெரியவந்தது. சிறை அதிகாரிகள் தொடர்ந்து விசாரித்தபோது தான் கஞ்சா கடத்தவில்லை என செந்தில் அவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். திடீரென அவர் அறையில் இருந்த கண்ணாடி கதவில் வேகமாக தலையால் மோதிக் கொண்டு தற்கொலைக்கு முயன்றார். இதில் அவரது தலை மற்றும் முகத்தில் பலத்தகாயம் அடைந்து ரத்தம் கொட்டியது. இதையடுத்து செந்திலை ஜெயில் அதிகாரிகள் மீட்டு கோவை அரசு ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுவருகிறது. செந்திலின் முகத்தில் இரு இடங்களில் வெட்டுக்காயம் இருந்தது. இதற்காக முகத்தில் 16 தையல்கள் போடப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. சம்பவம் தொடர்பாக ஜெயில் வார்டன் மனோரஞ்சிதம் கோவை ரேஸ்கோர்ஸ் போலீஸ் நிலையத்தில் புகார் செய்தார். அதன்பேரில் போலீசார் ராஜன், செந்தில் மற்றும் பார்வையாளர்கள் போல் வந்து அவர்களுக்கு கஞ்சா சப்ளை செய்த பிரபுராஜ் ஆகிய 3 பேர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். இவர்களில் பிரபுராஜை போலீசார் தேடி வருகிறார்கள்.




# போலீஸ் நிலையத்தில் பாதுகாப்பு கேட்டு 2 நாட்களில் 5 காதல் ஜோடிகள் தஞ்சம்

திருப்பூர், ஜன.26

திருப்பூர் வடக்கு மகளிர் போலீஸ் நிலையத்தில் கடந்த 2 நாட்களில் 5 காதல் ஜோடிகள் பாதுகாப்பு கேட்டு தஞ்சமடைந்தனர். திருப்பூர் ஆத்துப்பாளையத்தை சேர்ந்த மஞ்சுளா அஜித்குமார், உசிலம்பட்டி கீர்த்தனா திருப்பூர் பார்த்தசாரதி, ஈரோடு புளியம்பட்டி தாஜிதா பானு பாலகிருஷ்ணன், திருவண்ணாமலை அஸ்வினி திருப்பூர் நெருப்பெரிச்சல் மணிகண்டன், திருப்பூர் அருள்ஜோதிபுரம் இளம்பெண் வாலிபர் ஆகிய 5 காதல்ஜோடிகள் தஞ்சமடைந்தனர்.

இவர்கள் அனைவரும் திருப்பூரில் உள்ள பனியன் நிறுவனங்களில் பணியாற்றி வருகின்றனர். அப்போது ஏற்பட்ட பழக்கம் மூலம் காதலிக்க தொடங்கினர். வீட்டில் எதிர்ப்பு தெரிவிப்பார்கள் என்பதால் பொங்கல் விடுமுறையில் ஊருக்கு சென்று விட்டு வந்ததும், நண்பர்கள் உதவியுடன் திருமணம் செய்து கொண்டனர். பின்னர் பாதுகாப்பு கேட்டு திருப்பூர் வடக்கு மகளிர் போலீஸ் நிலையத்தில் தஞ்சமடைந்தனர். 2 நாட்களில் 5 காதல்ஜோடிகள் தஞ்சமடைந்ததால் போலீசார் அதிர்ச்சியடைந்தனர். இதையடுத்து காதல்ஜோடிகளின் பெற்றோர்களை வரவழைத்து பேச்சு வார்த்தை நடத்தினர்.

அப்போது சில பெற்றோர்கள், காதல் திருமணம் வேண்டாம். எங்களுடன் வந்து விடு என்று கண்ணீர் விட்டு கதறி அழுது மகள்களை அழைத்தனர். ஆனால் அவர்கள் பிடிவாதமாக கரம்பிடித்த காதலன்களுடன்தான் செல்வோம் என்று கூறினர். இதனால் என்னசெய்வதென்று தெரியாமல் தவித்த பெற்றோர்கள் கடைசியில் காதல் திருமணத்தை ஏற்றுக்கொண்டதுடன், எந்தவித பிரச்சனையுமின்றி வாழுமாறு வாழ்த்தினர்.

ஒரு காதல் ஜோடியின் பெற்றோர் திருமணத்தை ஏற்க மறுத்தனர். அவர்கள் தனது மகளிடம், உன்னை நன்றாக படிக்க வைத்து வேலைக்கு அனுப்பினோம். நல்ல மாப்பிள்ளை பார்த்து திருமணம் செய்து வைக்க எண்ணினோம். ஆனால் இப்படி காதல் திருமணம் செய்துவந்துநிற்கிறாயே... எங்களுடன் வந்து விடு.. உனக்கு நல்ல மாப்பிள்ளை பார்த்து திருமணம் செய்துவைக்கிறோம் என்று கதறி அழுதனர்.

ஆனால் அவர்களது மகள் காதலனுடன்தான் செல்வேன் என்று கூறியதுடன்தான் அணிந்திருந்த நகைகளை கழற்றி பெற்றோரிடம் கொடுத்து விட்டு அங்கிருந்து காதலனுடன் சென்றார். அப்போது அவரது பெற்றோரின் பாசப்போராட்டம் நெஞ்சை உருக்குவதாக இருந்தது.

# நாரதர் நகர்வலம் எழும்பூர் ரெயில் நிலையத்தில் டிக்கெட் கவுண்டரை தேடி அலையும் பயணிகள்...

சென்னை, ஜன.26

எழும்பூர் ரெயில் நிலையத்தில் நின்று கொண்டே ரெயில் நிலையத்துக்கு வழிகேட்டு அலையும் அவலம் தொடர்கிறது. இதை கேள்விப்பட்டதும் என்னடா இது? கண்கட்டி வித்தை போல் சொல்கிறார்கள். அதையும் தான் பார்த்து விடுவோமே என்று நாரதரும் புறப்பட்டார்.

ரெயில் நிலையத்தின் வடக்கு பிரதான வாயில் முற்றிலும் இடித்து அகற்றப்பட்டு மறுவடிவமைப்பு பணிகள் நடந்து வருகிறது. இதற்காக தகர தகடுகளால் ஆங்காங்கே தடுப்பு வேலிகள் அமைக்கப்பட்டுள்ளது.

தெற்கு நுழைவாயில் வழியாக உள்ளே வந்த நாரதர் பூந்தமல்லி நெடுஞ்சாலைக்கு வரும் நடை மேம்பாலம் வழியாக வந்தார். அப்போது டிக்கெட் எடுக்கும் கவுண்டர் எங்கிருக்கிறது என்று தெரியாமல் நான்கைந்து பேர் தவித்து கொண்டிருந்தார்கள். நாரதரை பார்த்ததும் சாமியார் தானே.... இங்கு தான் இருப்பவராக இருக்கும் என நினைத்து 'சாமி, டிக்கெட் கவுண்டர் எங்கே இருக்கு?' என்றார்கள்.

அதை கேட்டதும் நானும் அதை தேடித் தான்பா சென்று கொண்டிருக்கிறேன்! வாங்க எல்லோரும் சேர்ந்து தேடி கண்டுபிடிப்போம் என்று அவர்களையும் அழைத்து கொண்டு புறப்பட்டார்.

நேர் எதிரில் ஒரு 'லிப்ட்' அவுட் ஆப் சர்வீஸ் என்று எழுத்துக்கள் மின்னொளியில் ஓடிக் கொண்டிருந்தது. லிப்டில் செல்ல முடியாது என்றதும் சுற்றும் முற்றும் வழியை தேடினார்கள்.

வேனல்ஸ் ரோட்டுக்கு செல்லும் நடைபாதை இடிக்கப்பட்டிருந்தது. எஸ்கலேட்டர் செயல்படாது என்று மூடி வைக்கப்பட்டிருந்தது.

அங்கிருந்து பார்த்ததும் மெட்ரோ ரெயில் நிலையம் தெரிந்தது. அந்த பகுதிக்கு செல்வதற்கு 'சிக்சாக்' வடிவில் சாய்பு பாதை இருந்தது. அதன் வழியாக இறங்கியதும் இடது பக்கம் செல்வதா? வலது பக்கம் செல்வதா? என்ற குழப்பம்.

இடது பக்கம் வழியாக ரெயில் பயணிகள் சாரை சாரையாக வந்து கொண்டிருந்தார்கள். அவர்களை பார்த்ததும் கவுண்டர் அங்குதான் இருக்கும் என நினைத்து சென்றார்கள். அங்கு கவுண்டர் இல்லாததால் அந்த வழியாக சென்றவர்களிடம் விசாரித்தார்.

மீண்டும் வந்த வழியே திரும்பி மெயின் ரோட்டுக்கு செல்லுங்கள். அங்குதான் கவுண்டர் இருக்கிறது. அதோ அறிவிப்பு பலகை இருக்கிறதே கண்ணுக்கு தெரியவில்லையா? என்றார்.

உண்மைதான்பா. கண்ணுக்கு தெரியவில்லை. நீங்கள் தினமும் வந்து செல்பவர்களாக இருக்கும். எனவே உங்களுக்கெல்லாம் கண்ணில்படுகிறது. வெளியூர் வாசிகளுக்கு அறிவிப்பு பலகையை தேடி கண்டுபிடிப்பதே கஷ்டமாகத்தான் இருக்கிறது என்றபடி நகர்ந்தார்கள்.

மூட்டை முடிச்சுகளுடன் வெளியூர்களில் இருந்து வந்தவர்கள் சுமந்து வந்த களைப்பில் ஆட்டோக்கள் நிறுத்தி இருந்த பகுதியில் மக்கள் செல்லாத நடைபாதையில் சுமைகளை இறக்கி வைத்தார்கள். அவர்களை இங்கு அமரக் கூடாது என்று ஆட்டோ டிரைவர்கள் கூறிக் கொண்டிருந்தார்கள். ஒரு வழியாக டிக்கெட் கவுண்டரை கண்டுபிடித்து விட்டார்கள். டிக்கெட் கவுண்டருக்கு செல்ல முடியாதபடி இருசக்கர வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. தட்டுத்தடுமாறி உள்ளே சென்று டிக்கெட் எடுத்து சாதித்து விட்டார்கள்.




அதே நேரத்தில் உள் பகுதியில் கழிவுமண் ஏற்றி வந்தடிப்பர்லாரிவெளியே செல்ல வழியில்லாமல் தடு மாறியது. அப்போது பாதுகாப்பு பணியில் இருந்த போலீஸ்காரர் இருசக்கர வாகன ஓட்டிகளை சத்தம் போட்டார். இந்த பகுதியில் வாகனங்கள் நிறுத்தக்கூடாது. போலீஸ் ஆவண காப்பகம் அருகிலும் மெட்ரோ வளாகத்திலும் வாகன பார்க்கிங் வசதி உள்ளது என்றார்.

அதைகேட்ட வாகன ஓட்டிகள் மெட்ரோ பார்க்கிங் செல்ல வேண்டுமென்றால் பூந்தமல்லி சாலை வழியாக உள்ளே செல்ல வேண்டும். மீண்டும் அதே வழியில் கிட்டத்தட்ட ஒரு கிலோ மீட்டர் நடந்து டிக்கெட் கவுண்டருக்கு வர வேண்டும்.

அதுமட்டுமல்ல பார்க்கிங் கட்டணமும் ரூ.30 செலுத்த வேண்டும். 10 ரூபாய் டிக்கெட் வாங்க பார்க்கிங் கட்டணம் ரூ.30... பணிகள் முடியும் வரை இந்த கட்டணத்தையும் ரூ.10 ஆக நிர்ணயிக்கலாமே. மேலும் பார்க்கிங் பகுதியில் இருந்து டிக்கெட் கவுண்டருக்கு செல்ல ஏதாவது ஒரு ஓரமாக நடந்து செல்ல வழி அமைக்கலாமே. பயணிகளுக்கு வசதி செய்து கொடுக்காமல் தவறை அவர்கள் மீது திருப்பினால் எப்படி? பயணியின் அந்த நியாயமான கேள் க்கு போலீஸ்காரரால் பதில் சொல்ல முடியவில்லை.

அந்த வேடிக்கையை பார்த்துவிட்டு ரெயில் நிலையத்துக்கு செல்ல புறப்பட்டார் நாரதர். கவுண்டரில் இருந்து ரெயில் நிலையத்துக்கு செல்ல வைக்கப்பட்டிருக்கும் அறிவிப்பு பலகை நட்சத்திர ஓட்டல்களில் வைக்கப்பட்டிருக்கும் நிகழ்ச்சி நிரல் போர்டு போல் உள்ளது.


அந்த வழிகாட்டி பலகையை பெரிய அளவில் வைத்து மின்சார ரெயில் மற்றும் விரைவு ரெயில்களுக்கு செல்லும் வழி! நடைமேடை 1 முதல் 11 வரை செல்ல வேண்டிய பயணிகள் இந்த வழியே செல்லவும் என்று தெளிவாக வைத்திருக்கலாம். அப்போதுதான் சாதாரண மக்களுக்கும் புரியும்.

அதே போல் உள்ளே சென்றதும் லிப்ட் அருகே உள்ள நடைபாதைகளிலும் கண்ணில் படும்படி வழி காட்டு பலகைகளை தெளிவாக வைக்க வேண்டும்.

டிக்கெட் கவுண்டரில் ஆட்டோமெட்டிக் டிக்கெட் வழங்கும் 2 எந்திரங்கள் காட்சி பொருள் போல் நிற்கிறது. அந்த 2 எந்திரங்களும் 11 முதல் 1வது நடைமேடை வரை செல்லும். நடைமேம்பாலத்தில் தற்காலிகமாக வைத்தால் பயணிகளுக்கு சவுகரியமாக இருக்குமே!

மறுவடிமைப்பு சரி. ஆனால் மறுபடியும் பயணிகளுக்கு சிரமத்தை கொடுக்கலாமா? சிரமத்தை தாங்க மக்கள் தயார். ஆனால் அதை குறைக்கவும், எளிதாக்கவும் சம்பந்தப்பட்டவர்கள் சரியான நடவடிக்கை எடுக்கவில்லை என்பதே உண்மை. சிட்டிக்குள் சிட்டி சன்கள் படும் வேதனையை பார்த்து நாராயணா... நாராயணா... என்ற படியே நகர்ந்தார் நாரதர்.

# கொலை மிரட்டல் விடுக்கும் நாம் தமிழர் கட்சியினர் சங்ககிரி ராஜ்குமார் குற்றச்சாட்டு



சென்னை, ஜன.26

விடுதலை புலிகளின் தலைவர் பிரபாகரன் உடன் சீமான் இருப்பது போன்ற புகைப்படத்தை எடிட் செய்ததே நான் தான் என்று இயக்குநர் சங்ககிரி ராஜ்குமார் கூறியிருந்தார். இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதற்கு சீமான் மறுப்பு தெரிவித்தார்.

பெரியாரைப் பற்றி தொடர்ந்து பேசி வருவதால் எங்கள் தலைவர் பிரபாகரனோடு நான் எடுத்த படம் எடிட் செய்யப்பட்டது என்கிற அவதூறை பரப்பி வருகிறார்கள். இப்போது எடிட் செய்து கொடுத்ததாக சொல்லும் நபர் இவ்வளவு நாட்களும் என்ன செய்து கொண்டு இருந்தார் என்று தெரிவித்தார்.

இதனையடுத்து ஆதாரத்துக்கு ஒரு ஆதாரம் தேவையா என சீமானுக்கு இயக்குநர் சங்ககிரி ராஜ்குமார் கேள்வி எழுப்பி ஒரு வீடியோ ஒன்றை வெளியிட்டார்.

இதனையடுத்து நாம் தமிழர் தொண்டர்கள் தன்னை மிரட்டுவதாக எக்ஸ் தளத்தில் இயக்குநர் சங்ககிரி ராஜ்குமார் பதிவிட்டுள்ளார்.

அந்த பதிவில் கூறியிருப்பதாவது:

அண்ணனின் தம்பிகளுக்கு வணக்கம். கடந்த நான்கு ஐந்து நாட்களாக என் அலைபேசிக்கு நேரடியாகவும் வாட்ஸ் அப் மூலமாகவும் தொடர்ந்து அழைத்துக் கொண்டே இருக்கிறீர்கள். அழைப்பை எடுத்தால் வீட்டில் இருக்கும் பெண்களை வசை பாடுகிறீர்கள் அல்லது மிரட்டுகிறீர்கள். அதற்காக அச்சப்பட்டு கொண்டு இந்த பதிவை எழுதவில்லை.

கசப்பை சுவைத்த உங்கள் நாவிற்கு இந்த ஆபாச வார்த்தைகள் தான் ஆறுதல் தரும் என்றால் பேசி விட்டு போங்கள். இடையிடையே டேய்..சங்ககிரி ராஜ்குமார் நீ எந்த ஊர் காரன்டா என்று கேட்டு சிரிப்பும் மூட்டுகிறீர்கள்.

உங்கள் அச்சுறுத்தலுக்கோ.. ஆபாச வசவுகளுக்கோ நான் கவலைப்படவில்லை. உங்களிடம் வைக்கும் வேண்டுகோள் ஒன்றே ஒன்றுதான். எனக்கு அழைப்பதற்கு முன்பாக உங்கள் முகப்பு படமாக வைத்திருக்கும் தலைவர் பிரபாகரன் படத்தை நீக்கிவிட்டாவது அழையுங்கள்.

வீரம் நிறைந்த அவர் புகைப்படத்தை கண்களில் பார்த்துக் கொண்டே, காதுகளில் உங்கள் அழுக்கு வார்த்தைகளை கேட்பதற்கு அருவருப்பாக இருக்கிறது. உலகே கண்டு வியந்த ஒரு ஒப்பற்ற தலைவரை முடிந்த வரை இழிவு செய்து விட்டீர்கள் இனியேனும் விட்டு விடுங்கள். என சங்ககிரி ராஜ்குமார் கூறினார்.

# அரசுப் பள்ளியில் மின்சாரம் தாக்கி மாணவர் சாவு

சிவகங்கை, ஜன.25

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை அருகே பொய்யாவயல் அரசுப் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு படித்து வந்த மாணவர் சக்தி சோமையா (14 வயது). இன்று கணினி வகுப்பின் போது, ஆய்வகத்தில் கணினிக்கு மாணவர் மின் இணைப்பு கொடுக்க முயன்றுள்ளார். அப்போது அவர் மீது திடீரென மின்சாரம் பாய்ந்தது.

இதில் தூக்கி வீசப்பட்ட மாணவரை, ஆசிரியர்கள் மீட்டு காரைக்குடி அரசு தலைமை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். இருப்பினும் சிகிச்சை பலனின்றி மாணவர் பரிதாபமாக உயிரிழந்தார். மாணவரின் உயிரிழப்புக்கு பள்ளி நிர்வாகத்தின் கவனக்குறைவே காரணம் என்று கூறி உறவினர்கள் காரைக்குடி அரசு மருத்துவமனை முன்பு மறியலில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் காரணமாக அந்த பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. போலீசார் உயிரிழந்த மாணவரின் உறவினர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். அரசுப் பள்ளியில் மின்சாரம் தாக்கி ஒன்பதாம் வகுப்பு படிக்கும் மாணவர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# திருமணம் ஆகாததால் விரக்தி: சலூன் கடைக்காரர் தற்கொலை

கோவை, ஜன.26

கோவை பீளமேடு அருகே ஆவாரம்பாளையம் பகுதியை சேர்ந்தவர் அங்கமுத்து. இவருடைய மகன் பிரகாஷ் (வயது 36). சலூன் கடை நடத்தி வந்த இவருக்கு திருமணம் ஆகவில்லை. அவருக்கு உறவினர்கள் பல இடங்களில் பெண் தேடினர். ஆனால் திருமணம் தள்ளி போய்க் கொண்டே போனது.

இதனால் வாழ்க்கையில் விரக்தி அடைந்த பிரகாஷ் சம்பவத்தன்று வீட்டில் யாரும் இல்லாத போது மதுவில் விஷம் கலந்து குடித்தார். பின்னர் அவர், தனது நண்பர்களை செல்போனில் தொடர்பு கொண்டு தான் விஷம் குடித்து விட்டதாக கூறினார். இதனால் அதிர்ச்சி அடைந்த நண்பர்கள், பிரகாசை மீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் கோவை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு பரிசோதித்த டாக்டர்கள், பிரகாஷ் ஏற்கனவே இறந்து விட்டதாக கூறினர். இது குறித்த புகாரின் புகாரின் பேரில் பீளமேடு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஏலச்சீட்டு நடத்தி ரூ.4 கோடி மோசடி ஜவுளிக்கடை உரிமையாளர் தலைமறைவு

அம்பத்தூர், ஜன.26

அம்பத்தூரை அடுத்த புதூர்பஸ்நிறுத்தம் அருகே ஜவுளிக்கடை நடத்தி வந்தவர் கமலக் கண்ணன். இவர் ஏலச் சீட்டும் நடத்தி வந்தார். இதில் அம்பத்தூர், புதூர் உள்ளிட்ட சுற்றுப்புற பகுதிகளை சேர்ந்த சுமார் 500க்கும் மேற்பட்டோர் பணம் கட்டி வந்தனர்.

ஆனால் பணம் கட்டி முடித்தவர்களுக்கு பணத்தை திருப்பி கொடுக்கவில்லை என்று தெரிகிறது.

இதனால் பணம் கட்டி ஏமாந்தவர்கள் கமலக் கண்ணனுக்கு நெருக்கடி கொடுத்தனர். இதைத் தொடர்ந்து அவர் கடந்த மாதம் திடீரென தலைமறைவானார். இதனால் ஏலச் சீட்டுக்கு பணம் கட்டியவர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

இந்த நிலையில் பணம்



கட்டி ஏமாந்த சண்முகபுரத்தை சேர்ந்த அரசகுமார் உள்ளிட்ட சுமார் 70க்கும் மேற்பட்டோர் கமலக் கண்ணன் மீது ஆவடி மத்திய குற்றப்பிரிவு போலீசில் புகார் செய்தனர்.

இதுகுறித்து போலீசார் விசாரணை நடத்திய போது கமலக்கண்ணன் ஏலச்சீட்டு நடத்தி ரூ.4 கோடி வரை மோசடியில் ஈடுபட்டு இருப்பது தெரிந்தது. தலைமறைவான அவரை போலீசார் தேடி வருகிறார்கள்.

# கோட்டூர்புரத்தில் தொழில் அதிபர் வீட்டில் ரூ.20 லட்சம் நகைகள் கொள்ளை

சென்னை, ஜன.26

சென்னை கோட்டூர்புரம் அம்பாள் தெருவில் வசித்து வரும் தொழில் அதிபர் ஒருவரின் வீட்டில் ரூ.20 லட்சம் மதிப்பிலான தங்கம் மற்றும் வைர நகைகள் மாயமாகியுள்ளன.

இது தொடர்பாக அவர் அளித்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். தொழில் அதிபரின் வீட்டில் பணியாற்றி வரும் டிரைவர்கள் மீது சந்தேகம் இருப்பதாக புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக போலீசார் விசாரித்து வருகிறார்கள்.

# புதிதாக பதவியேற்ற நிர்வாகிகளுக்கு வெள்ளி நாணயங்களை பரிசளித்த தவெக தலைவர் விஜய்

சென்னை, ஜன.26

2026ம் ஆண்டு சட்டமன்ற தேர்தல் நெருங்கி வரும் நிலையில் அதை எதிர்கொள்ள தமிழக வெற்றிக் கழகம் மும்முரமாக தயாராகி வருகிறது. இதற்காக மாவட்ட செயலாளர்கள், நிர்வாகிகள் நியமனம் தொடர்பான நடவடிக்கைகளை அக்கட்சி தீவிர ப்படுத்தி வருகிறது. அந்தவகையில், கட்சிக்கு புதிய நிர்வாகிகளைநியமிக்கும் பணியில் தவெக தலைவர் விஜய் ஈடுபட்டு வருகிறார். அதன்படி, மொத்தமுள்ள 38 மாவட்டங்களுக்கு 120 மாவட்ட செயலாளர்களை தமிழக



வெற்றிக் கழகம் அறிவித்துள்ளது. மேலும், புதிய நிர்வாகிகளையும் அக்கட்சி அறிவித்துள்ளது. இந்நிலையில், தமிழக வெற்றிக் கழகத்தில் புதிதாக பதவியேற்ற நிர்வாகிகளுக்கு அக்கட்சியின் தலைவர் விஜய் வெள்ளி நாணயங்களை பரிசளித்துள்ளார்.

# டங்ஸ்டன் விவகாரத்தில் அனைத்துக் கட்சியினருமே போராடி இருக்கின்றனர் பேராசிரியர் ராம சீனிவாசன்

மதுரை, ஜன.26

மதுரை மாவட்டம் அரிட்டாபட்டி உள்ளிட்ட கிராமங்களில் டங்ஸ்டன் சுரங்க திட்டத்தை ரத்து செய்ய வலியுறுத்தி கடந்த 60 நாட்களாக மேலூர் பகுதி மக்கள் போராட்டம் நடத்தி வந்தனர். இந்த நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன் அரிட்டாபட்டி சென்ற பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை, விவசாயிகளுக்கு ஆதரவாக செயல்படும் மத்திய அரசு நிச்சயமாக டங்ஸ்டன் திட்டத்தை கொண்டு வராது என உறுதி அளித்து இருந்தார்.

இந்த விவகாரம் தொடர்பாக கடந்த செவ்வாய்க்கிழமை விவசாயிகள் ஏழு பேர் கொண்ட குழுவினர் பா.ஜ.க. மாநில பொதுச் செயலாளர் பேராசிரியர் ராம சீனிவாசன் தலைமையில் மத்திய சுரங்கத் துறை அமைச்சர் கிஷன் ரெட்டியை சந்தித்து பேசினர். இதனைத் தொடர்ந்து டங்ஸ்டன் சுரங்கத்திற்கான ஏலத்தை ரத்து செய்து மத்திய மந்திரி கிஷன் ரெட்டி நேற்று அறிவிப்பு வெளியிட்டார். இது மேலூர்பகுதி மக்களிடையே மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

இந்த நிலையில் டெல்லி சென்ற விவசாயிகள் விமானம் மூலம் மதுரை வந்தடைந்தனர். அவர்களுக்கு பா.ஜ.க. தொண்டர்கள் மற்றும் அரிட்டாபட்டி கிராம மக்கள் மாலை அணிவித்து பட்டம் சூட்டி உற்சாக வரவேற்பு அளித்தனர். பின்னர் ராம.சீனிவாசன் நிருபர்களிடம் கூறியதாவது:



டங்ஸ்டன் பிரச்சினை முடிவுக்கு வந்திருக்கிறது. மத்திய மந்திரி மூலமாக டங்ஸ்டன் சுரங்கத்திற்கு கொடுத்த அனுமதி ஏலம் ரத்து செய்யப்பட்டிருக்கிறது. இந்த முடிவுக்கு அனைவரும் வரவேற்பு தெரிவித்துள்ளனர். எந்தெந்த மாநிலங்களில் கனிம வளங்கள் உள்ளது என நாடு முழுவதும் ஜியாலஜிகல் நிறுவனம் ஆய்வு செய்து வருகிறது. டங்ஸ்டன் அரிய வகை தாதுப் பொருள். அதை தற்போது வெளிநாட்டிலிருந்து தான் இறக்குமதி செய்து வருகிறோம்.

தமிழ்நாட்டில் இருப்பதால்தான் தமிழக அரசிடம் பேசி ஏலம் விட தயாரான போது மாநில அரசு எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை. விவசாயிகளுடன் கலந்தாலோசித்தபோது தான் இங்கிருக்கும் பாதிப்புகள் எங்களுக்கு தெரிய வந்தது. மக்கள் தெரிவித்த கருத்துக்களை மத்திய மந்திரி ஏற்றுக்கொண்டு விவசாயிகளுக்கு ஆதரவாக இந்த அரசு இருக்கும். இதற்காக மோடியிடம் பேசி டங்ஸ்டன் திட்டத்தை ரத்து செய்தார்.

டங்ஸ்டன் போராட்டத்தை திசை திருப்ப முயன்றும் மக்கள் உறுதியுடன் போராடினர். டங்ஸ்டன் திட்டத்தை ரத்து செய்ததை தொடர்ந்து டெல்லி சென்ற விவசாயிகள் கிஷன் ரெட்டிக்கு அரிட்டாபட்டி வர விவசாயிகள் அழைப்பு விடுத்ததாகவும், அவரும் வருவதாக ஒத்துக்கொண்டுள்ளாதாகவும் தெரிவித்துள்ளார். இதற்காக பாடுபட்ட அண்ணாமலை, எல்.முருகன் உள்ளிட்டோருக்கும், எல்லாவற்றிற்கும் காரணமான பிரதமர் மோடிக்கும் நன்றி.

தமிழக அரசின் நடவடிக்கையால்தான் மோடி அரசு பணிந்து திட்டத்தை ரத்து செய்துவிட்டது என தமிழக முதல்வர் தெரிவித்தது குறித்து இந்த விவகாரத்தை நான் அரசியலாக பார்க்கவில்லை. அதற்காக அனைத்து கட்சியினருமே போராடி உள்ளனர். ஆனால் இந்த விஷயத்தை அரசியலாக இப்போது பேச விரும்பவில்லை அதற்காக தனியாக நான் பதில் கூறுகிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், மேலூர் பகுதியில் கடந்த இரண்டு மாதங்களாக மக்கள் கவலையோடு இருந்தார்கள். மிகப்பெரிய சவாலாக இருந்தது. மதுரை நோக்கி மிகப்பெரிய நடைபயணம் மேற்கொண்டு இருந்தோம். இந்தப் போராட்டத்தின் விளைவாக மிகப்பெரிய வெற்றி பரிசு கிடைத்திருக்கிறது. எங்கள் கிராமத்திற்கு பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை வந்து, டங்ஸ்டன் திட்டம் கிராமத்திற்கு வராது என உறுதி அளித்தார்.

அதை ஏற்றுக்கொண்டு டெல்லி சென்று மத்திய அமைச்சரிடம் டங்ஸ்டன் விவகாரம் பற்றி தெரிவித்தோம். எங்களிடம் விளக்கம் கேட்ட மத்திய மந்திரி தொடர்பாக பிரதமரிடம் பேசிவிட்டு சொல்வதாக கூறினார். நாங்கள் முடிவு தெரியாமல் இங்கிருந்து செல்ல மாட்டோம் என கூறினோம்.

அடுத்த அடுத்த நாள் டங்ஸ்டன் சுரங்கம் ரத்து செய்யப்பட்ட ஆணையை எங்களிடம் வழங்கினார்கள். இத்திட்டத்தை ரத்து செய்த பிரதமர் மோடிக்கும், மத்திய மந்திரி கிஷன் ரெட்டி மற்றும் பா.ஜ.க. நிர்வாகிகள் அனைவருக்கும் கிராமத்தின் சார்பாக நன்றி தெரிவிக்கிறோம் என்றார்.

# புஷ்பா பட தயாரிப்பு நிறுவனத்தின் அடுத்த படத்தில் 'லால் சலாம்' நடிகை



கடந்த மாதம் சுகுமார் இயக்கத்தில் அல்லு அர்ஜுன் நடிப்பில் வெளியான படம் புஷ்பா 2. ராஷ்மிகா மந்தனா கதாநாயகியாக நடித்திருந்த இப்படத்தை மைத்திரி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் தயாரித்திருந்தது.

இப்படத்தை தொடர்ந்து, இந்நிறுவனம், சன்னி தியோலின் ஜாத், நித்தினின் ராபின்ஹுட் உள்ளிட்ட படங்களைதயாரித்து வருகிறது. இது மட்டுமில்லாமல் '8 வசந்தலு' என்ற படத்தையும் தயாரிக்கிறது. பனீந்திர நரசெட்டி இயக்கும் இப்படத்தில் லால் சலாம் படத்தில் நடித்திருந்த அனந்திகா சனில்குமார் கதாநாயகியாக நடிக்கிறார்.

மேலும், ரவி தேஜா துக்கிராலா, சுமந்த் நிட்டூர்கர், ஹனு ரெட்டி, கண்ணா பசுநூரி உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். இந்நிலையில் இப்படத்தின் முதல் டீசரை படக்குழு வெளியிட்டுள்ளது.



# விவாகரத்தை அறிவித்த 'பைரவா' பட நடிகை!

நீண்ட யோசனைக்குப் பிறகு நான் என் திருமணப் பந்தத்தை முடித்துக் கொள்ளும் முடிவை எடுத்திருக்கிறேன் என்று மலையாள சினிமா நடிகை அபர்ணா இன்ஸ்டாவில் குறிப்பிட்டுள்ளார்.

நிவின் பாலி நடித்த 'நான் நின்னோடு கூடேயுண்டு' என்ற படத்தில் நடித்ததன் மூலம் சினிமாவில் அறிமுகமானவர் அபர்ணா வினோத். அதன்பின் கோஹினூர் என்ற படத்தில் நடித்தார். தமிழில் விஜய்யின் 'பைரவா' படத்தில், கீர்த்தி சுரேஷின் தோழியாக நடித்துள்ளார். பின் பரத் நடித்த 'நடுவன்' படத்தில் நாயகியாக நடித்தார். இவர் ரினில் ராஜ் என்பவரை காதலித்து வந்தார். இதையடுத்து 2022ம் ஆண்டு அக்டோபர் மாதம் இவர்களுக்கு நிச்சயதார்த்தம் நடைபெற்றது. இதைத்தொடர்ந்து 2023ம் ஆண்டு பிப்ரவரி மாதம் காதலர் தினத்தில், அபர்ணாவும் ரில்ராஜும் திருமணம் செய்து கொண்டனர். திருமணமாகி 2 வருடம் முடிந்த நிலையில் தனது காதல் கணவரை விவாகரத்து செய்வதாக அறிவித்துள்ளார். இதுபற்றி தனது இன்ஸ்டாவில் குறிப்பிட்டுள்ள அவர், "நீண்ட யோசனைக்குப் பிறகு நான் என் திருமணப் பந்தத்தை முடித்துக் கொள்ளும் முடிவை எடுத்திருக்கிறேன். இது எளிதான விஷயமல்ல என்றாலும் என் வளர்ச்சிக்கும் என் காயம் குணமாவதற்கும் இதுவே சரியானதாக இருக்கும் என்றும் நம்புகிறேன். முன்னேற்றத்தை நோக்கி நகர்வதற்காக இந்த முடிவை எடுத்துள்ளேன்" என்று தெரிவித்துள்ளார்.

# பிறந்த நாளில் உடல் உறுப்பு தானம் செய்த இசையமைப்பாளர் இமான்



விஜய் நடிப்பில் 2002ம் ஆண்டு வெளியான 'தமிழன்' படத்தின் மூலம் தமிழ் திரையுலகிற்கு இசையமைப்பாளராக அறிமுகமானவர் டி.இமான். அதன்பின்னர் ரஜினி, அஜித், விஜய், சூர்யா, விக்ரம், கார்த்தி உள்ளிட்ட பல முன்னணி நடிகர்களின் படங்களுக்கு இசையமைத்து தனக்கான இடத்தை தக்கவைத்துக் கொண்டார். சிறுத்தை சிவா இயக்கத்தில் அஜித் நடிப்பில் வெளியான 'விஸ்வாசம்' படத்திற்காக டி.இமான் தேசிய விருது பெற்றார். கிரி, மைனா, கும்கி, கயல், பாண்டியநாடு, ஜீவா, ஜில்லா, விஸ்வாஸம், மனம்கொத்திப் பறவை, வருத்தப்படாத வாலிபர் சங்கம், ரஜினி முருகன், சீமராஜா, நம்ம வீட்டுப்பிள்ளை, மருது, வெள்ளக்கார துரை, அண்ணாத்த எனப் பல வெற்றிப் படங்களுக்கு இசையமைத்து பல ஹிட் பாடல்களைக் கொடுத்தார், டி.இமான்.

இசையமைப்பாளர் இமான், இப்போது சமூக சேவகராகவும் நற்பணிகள் பலவற்றை செய்து வருகிறார். இப்போது பிரபு சாலமன், சுசீந்திரன் உள்பட பலரின் படங்களுக்கு இசைமைத்தும் வருகிறார். சமீபத்தில் அவரது இசையில் வெளியான 'பேபி & பேபி' பட பாடல்களும் வரவேற்பை பெற்று வருகிறது.

இமான் பிறந்த நாளைக் கொண்டாடினார். அப்போது அவர் தன் உடலை சென்னை அரசு மருத்துவமனைக்கு தானமாக அளித்துள்ளார். இதனை அவர் சமூக ஊடகங்கள் மூலம் மக்களுக்கு தெரியப்படுத்தி உள்ளார்.

'நாம இறந்த பிறகும் இந்த உடல் பயனுள்ளதாக இருக்கும். ரெண்டு நாளைக்கு முன்னாடி, உடல்தானம் செய்திருந்தாலும், பிறந்த நாளன்றுதான் அறிவிக்க நினைத்தேன். அதன்படி இன்று அறிவித்திருக்கிறேன். என்னோட கண்கள், இதயம், நுரையீரல் என அனைத்து உறுப்புகளை தானம் செய்து முறைப்படி தானம் செய்ததற்கான டோனர் அட்டையையும் வாங்கிட்டேன். நாம ஆரோக்கியமாக இருக்கும் போதே உடல் உறுப்புகளை தானம் செய்திடனும் விரும்புறேன். சில பேர் கடைசி காலத்தில் உடல் தானம் செய்யணும்னு விரும்புவாங்க. இப்ப என் மனைவியும் உடல் உறுப்பு தானம் செய்திருக்காங்க. நாம இறந்து ஒரு மணி நேரத்துக்குள்ளாக மருத்துவமனைக்கு தகவல் சொன்னால்தான் கண்கள், நுரையீரல், இதயம் போன்ற உறுப்புகள் செயலிழக்காமல் இருக்கும் போதே, எடுத்துக்க முடியும்' என்று கூறியுள்ளார் இமான்.

# 4 இலங்கை, 3 பாகிஸ்தான் வீரர்கள்... 2024ம் ஆண்டின் சிறந்த ஒருநாள் ஆண்கள் அணியை அறிவித்த ஐ.சி.சி





சர்வதேசகிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) ஒவ்வொரு வருடமும் சிறந்த வீரர், சிறந்த வீராங்கனை, சிறந்த ஒரு நாள் அணி, டி 20 அணி, டெஸ்ட் அணி உள்ளிட்ட பல்வேறு விருதுகளை வழங்கி வருகிறது.

இந்நிலையில் 2024ம் ஆண்டிற்கான ஐ.சி.சி. விருதுகள் வென்றவர்களின் விவரங்கள் இன்று முதல் வெளியிடப்படும் என ஐ.சி.சி. அறிவித்திருந்தது. அதன்படி, 2024ம் ஆண்டின் சிறந்த ஒருநாள் ஆண்கள் அணியை ஐ.சி.சி. அறிவித்துள்ளது. ஆச்சரியமளிக்கும் வகையில் இதில் ஒரு இந்திய வீரர்கள் கூட இடம் பெறவில்லை.

இந்த அணியில் அதிகபட்சமாக இலங்கை வீரர்கள் 4 பேரும், பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் வீரர்கள் தலா 3 பேரும் இடம் பிடித்துள்ளனர். இந்த அணிக்கு சரித் அசலங்கா கேப்டனாகவும், குசல் மெண்டிஸ் விக்கெட் கீப்பராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

2024ம் ஆண்டின் சிறந்த ஒருநாள் ஆண்கள் அணி விவரம்: சைம் அயூப் (பாகிஸ்தான்), ரஹ்மனுல்லா குர்பாஸ் (ஆப்கானிஸ்தான்) பதும் நிசாங்கா (இலங்கை), குசல் மெண்டிஸ் (விக்கெட் கீப்பர், இலங்கை), சரித் அசலங்கா (கேப்டன், இலங்கை), ஷெர்பேன் ரூதர்போர்டு (வெஸ்ட் இண்டீஸ்), அஸ்மத்துல்லா ஓமர்சாய் (ஆப்கானிஸ்தான்), வனிந்து ஹசரங்கா (இலங்கை), ஷாகின்ஷா அப்ரிடி (பாகிஸ்தான்), ஹாரிஸ்ரவூப் (பாகிஸ்தான்), அல்லாகசன்பர் (ஆப்கானிஸ்தான்).

# ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ்; ஜானிக் சினெர் இறுதிப்போட்டிக்கு முன்னேற்றம்



'கிராண்ட்ஸ்லாம்' போட்டிகளில் ஒன்றான ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் மெல்போர்னில் நடைபெற்று வருகிறது. விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ள இந்த தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் ஜானிக் சினெர் (இத்தாலி) பென் ஷெல்டன் (அமெரிக்கா) ஆகியோர் மோதினர் .

பரபரப்பான இந்த ஆட்டத்தில் சிறப்பாக விளையாடிய ஜானிக் சினெர் 7(6)6(2) , 6-2,6-2 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார். இதனால் ஜானிக் சினெர் இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்.

நடைபெற உள்ள இறுதிப்போட்டியில் ஸ்வெரேவ் ஜானிக் சினெர் ஆகியோர் மோதுகின்றனர் .



# பஞ்சாபில் தமிழக கபடி வீராங்கனைகள் மீது தாக்குதல்

பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான 2024 2025 கபடி போட்டிகள் பஞ்சாப் மாநிலத்தில் நடைபெற்று வருகிறது. இந்த போட்டியில் தமிழ்நாட்டில் பல்வேறு பல்கலைக்கழகங்களை சேர்ந்த கபடி வீராங்கனைகள் பங்கேற்று இருந்தனர். தற்போது போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த போட்டி தொடரில் இன்று காலை அன்னை தெரசா பல்கலைக்கழகம், பீகாரின் தர்பங்கா பல்கலைக்கழக அணியினர் இடையே போட்டி நடந்தது. அப்போது, பீகார் வீராங்கனை ஒருவரின் பவுல் பிளே தொடர்பாக தமிழக வீராங்கனை நடுவரிடம் புகார் அளித்துள்ளார். இதையடுத்து தமிழக வீராங்கனை மற்றும் நடுவர் இடையே வாக்குவாதம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

இந்த வாக்கு வாதத்தின் போது நடுவர் தமிழக வீராங்கனையை தாக்கியதாக கூறப்படுகிறது. இதனால் ஆத்திரமடைந்த பிற தமிழக வீராங்கனைகள் வாக்குவாதம் செய்ய, நடுவருக்கு ஆதரவாக பீகார் தர்பங்கா பல்கலை., மாணவிகள் வந்துள்ளனர். இதனால் ஏற்பட்ட வாக்குவாதம் மோதலாக உருவாகவே, அங்கு பீகார் தமிழ்நாடு கபடி வீராங்கனைகள் மோதல் சம்பவத்தில் ஈடுபட்டனர்.

இதனால் அங்கு பரபரப்பு சூழல் உண்டாகியது. இதனால் தற்காலிகமாக போட்டி நிறுத்தப்பட்டு, தமிழ்நாடு அதிகாரிகள் பஞ்சாப் நிர்வாகம் மற்றும் போட்டி நடத்தும் அதிகாரிகளிடம் விசாரித்து வருகின்றனர். கபடி போட்டியில் தமிழக வீராங்கனைகள் தாக்கப்பட்டுள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.